ஶ்ரீ:
ஶ்ரீமதே ராமாநுஜாய நம:
ஶ்ரீமதே நிக₃மாந்தமஹாதே₃ஶிகாய நம:

## நம்மாழ்வார் அருளிச்செய்த திருவாய்மொழி

# 1.8 – ஓடும்புள்

*This document has been prepared by*

*Sunder Kidāmbi*

*with the blessings of*

ஶ்ரீ ரங்க₃ராமாநுஜ மஹாதே₃ஶிகன்

*His Holiness śrīmad āṇḍavan śrīraṅgam*

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

# 1.8 – ஓடும்புள்

‡ ஓடும் புள் ஏறி ⋆
சூடும் தண் துழாய் ⋆
நீடு நின்றவை ⋆
ஆடும் அம்மானே ‖ **1.8.1** ‖

அம்மானாய்ப் பின்னும் ⋆
எம்மாண்பும் ஆனான் ⋆
வெம் மா வாய் கீண்ட ⋆
செம் மா கண்ணனே ‖ **1.8.2** ‖

கண் ஆவான் என்றும் ⋆
மண்ணோர் விண்ணோர்க்கு ⋆
தண் ஆர் வேங்கட ⋆
விண்ணோர் வெற்பனே ‖ **1.8.3** ‖

வெற்பை ஒன்றெடுத்து ⋆
ஒற்கம் இன்றியே ⋆
நிற்கும் அம்மான் சீர் ⋆
கற்பன் வைகலே ‖ **1.8.4** ‖

வைகலும் வெண்ணெய் ⋆
கை கலந்துண்டான் ⋆
பொய் கலவாது ⋆
என் மெய் கலந்தானே ‖ **1.8.5** ‖

கலந்தென் ஆவி ⋆
நலங்கொள் நாதன் ⋆
புலங்கொள் மாணாய் ⋆
நிலம் கொண்டானே ॥ **1.8.6** ॥

கொண்டான் ஏழ் விடை ⋆
உண்டான் ஏழ் வையம் ⋆
தண் தாமம் செய்து ⋆
என் எண் தான் ஆனானே ॥ **1.8.7** ॥

ஆனான் ஆன் ஆயன் ⋆
மீனோடேனமும் ⋆
தான் ஆனான் என்னில் ⋆
தான் ஆய சங்கே ॥ **1.8.8** ॥

சங்கு சக்கரம் ⋆
அங்கையில் கொண்டான் ⋆
எங்கும் தானாய ⋆
நங்கள் நாதனே ॥ **1.8.9** ॥

நாதன் ஞாலம் கொள் ⋆
பாதன் என் அம்மான் ⋆
ஓதம் போல் கிளர் ⋆
வேத நீரனே ॥ **1.8.10** ॥

‡ நீர் புரை வண்ணன் ⋆
சீர் சடகோபன் ⋆
நேர்தல் ஆயிரத்து ⋆
ஓர்தல் இவையே ॥ **1.8.11** ॥

அடிவரவு — ஓடும் அம்மான் கண் வெற்பை வைகலும் கலந்து கொண்டான் ஆனான் சங்கு நாதன் நீர் இவையும்

ஓடும்புள் முற்றிற்று

நம்மாழ்வார் திருவடிகளே சரணம்